பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவர்.......

ரோமர் :4:24

மலர் 13
இதழ் 03

செய்தி மலர்
ஜூலை 2012

# உங்கள் சகோதரரிடமிருந்து



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர,சகோதரிகளுக்கு நமது ஆண்டவரும் இரட்சகருமான கிறிஸ்து இயேசு நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

வருகின்ற இரண்டு வருடத்திற்கு புதிய செயற்குழுவில் எங்களை தெரிவு செய்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். தேவனுடைய பெரிய சித்தத்தை அறிந்து இந்த செயற்குழு செயல்பட உங்கள் ஜெபங்களில் எங்களை நினைத்துக் கொள்ளுங்கள்.

*2012 ஆம் வருடத்தில் 6மாதம் முடிந்து 7ஆம் மாதத்திற்குள் பிரவேசிக்க தேவன் நமக்கு கிருபை செய்திருக்கிறார். வருடத்தின் பாதியில் நிற்கிற நாம் தேவன் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தத்-தையும், நாம் தேவனுடன் செய்த உடன் படிக்கையையும் ஆராய்ந்து பார்க்கலாம்.*

**தேவன் வாக்கு பண்ணினதை நிறைவேற்ற வல்லவர்.** *(ரோமர் 4:21)*

*ஆபிரகாம், தேவன் வாக்கு பண்ணினதை நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார், என்று முழு நிச்சயமாய் நம்பி, விசுவாசத்தில் வல்லவனானான். நம்முடைய விசவாசம் யார் மேல் இருக்கிறது? நம்முடைய திறமையின் மேலா? பதவியின் மேலா? அல்லது நமது ஞானத்தின் மேலா?*

ஆபிரகாம் நான் பெலவீனன் என்றும் தன்னால் எதுவும் முடியாது என்று தெரிந்தும், வாக்கு பண்ணினவர் தேவன் என்பதால், அவர் மேல் நம்பிக்கையாய் இருந்தான். வாக்குதத்தத்தின்படியே ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டான்.

இதுவரையும் ஒன்றும் நடக்காதது போல், வெறுமையாய் இருக்கலாம், குடும்பத்தில் பிரச்சனை, கடன் பிரச்சனை, பிள்ளைகள் வளர்ப்பு, பிள்ளைகளின் படிப்பு, வேலைஸ்தலத்தில் போராட்டம், என்று குழப்பமாக இருக்கலாம்.

நமது தேவனுடைய வாக்குத்தத்தம் மாறாதது, நான் கர்த்தர், நான் மாறாதவர், என்று நம் தேவன் சொல்லுகிறார்.(மல்கியா 3:6)

*2. நாம் தேவனுடன் செய்த உடன்படிக்கை(அ) பொருத்தனை எந்த நிலையில் உள்ளது?*

*இந்த வருடத்தில் முழுமையாய் மனந்திரும்ப வேண்டும் என்ற பொருத்தனை, ஞானஸ்தானம் கட்டாயம் எடுக்கவேண்டும் என்ற பொருத்தனை, தாராளமாய் நேரத்தையும், தாராளமாய் பொருட்களையும், நமக்கு ஆண்டவர் கொடுத்த தாலந்துகளையும் ஆண்டவருக்காக கொடுப்பேன் என்று நாம் ஏரெடுத்த பொருத்தனை எந்த நிலையில் உள்ளது.*

*கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, தேவன் எப்படியும் தமது வாக்குதத்தத்தை நிறைவேற்றுவார். ஆனால் நம்முடைய பொருத்தனையைப் நிறைவேற்றவும், நாம் தீவிரபடவேண்டும், என்று தேவனுடைய உள்ளம் நம்மை பார்த்துக்கொண்டிருக்கிறது என்கிறதை நாம் மறந்து போக வேண்டாம், இந்த மாதமும் நம்மை ஆசீர்வதிக்கும்படி தேவனுடைய உள்ளம் எதிர்பார்த்து கொண்டிருக்கிறது. அவருடைய பலத்த கரத்திற்குள் வந்து, ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வோமாக.*

*இந்த மாதத்தில் நடைபெறும் சபை ஆராதனைகளிலும், சபையின் ஊழியங்களிலும் கலந்து கொள்ளுங்கள், சபையின் ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்*

*கர்த்தரின் கிருபை நம் அனைவரோடும் இருந்து வழி நடத்துவதாக!. ஆமென்*


*கர்த்தரின் பணியில்*

*அன்பு சகோதரன் R. ரவிச்சந்திரன்*



தெய்வபக்தியுள்ள ஒரு மனிதன் ஓர் அவசர வேலையினிமித்தம் நள்ளிரவில் தொலைதூரமுள்ள ஓரிடத்திற்குச் செல்ல வேண்டியதிருந்தது. அவன் போகும்போது திருடன் ஒருவன், பூட்டை உடைத்து கடையைத் திறந்துக்கொண்டிருக்கக் கண்டான்.உடனே அவனிடம் சென்று, ‘‘பிறரது உடைமையை நீ அபகரித்து நஷ்டம் விளைவிப்பது பெரிய தவறு’’ என்று கூறினான். திருடன், ‘‘நீ உயிருடன் போகவேண்டுமானால் பேசாமல் போய்விடு. இல்லையானால், உனக்குத் தொந்தரவு ஏற்படும்’’ என்று எச்சரித்தான்.அந்த மனிதனோ தன் முயற்சியை விடவில்லை. திருடன் தன் சொல்லுக்கு இணங்காதபோது கூக்குரலிட்டு அயலகத்தாரை எழுப்பினான். அவர்கள் திருடனைக் குற்றஞ்சாட்டவும், அவன் இவன்மீது குற்றம் சாட்டினான். சாட்சியாக ஒருவரும் இல்லாததால் இருவரையும் சிறைப்படுத்தி ஓர் அறையில் அடைத்து வைத்தார்கள். காவல் அதிகாரியும் அவனோடு சிலரும் அவர்களது உரையாடலை கேட்க மறைந்திருந்தனர்.உடன் கைதியாயிருந்த அந்த நல்ல மனிதனை திருடன் பார்த்து, ‘‘உன்னை எப்படி மாட்டி வைத்தேன் பார்த்தாயா ? நான் முதலிலேயே உன்னைப் போய்விடு அல்லது துன்பப்படுவாய் என்று சொன்னேனே ? இப்போது உன் உண்மை நடத்தை எவ்வாறு உன்னை காப்பாற்றுகிறது பார்ப்போம் ?’’ என்று கூறினான்.இதைக் கேட்டுக்கொண்டிருந்த இந்த அதிகாரி, கதவைத் திறந்து அந்த நல்ல மனிதனை விடுதலை செய்து, பொருளும் கொடுத்து அனுப்பி வைத்தான்.திருடனையோ நையப்புடைத்து சிறைச்சாலைக் கிடங்கில் அடைத்து வைத்தான். பொய்ச் சாட்சிக்காரன் ஆக்கினைக்குத் தப்பான்; பொய்களைப் பேசுகிறவனும் தப்புவதில்லை.–நீதிமொழிகள்.19:5

! நாமும் எப்போதும் நேர்மையாய் இருக்க முயற்சிக்க வேண்டும். அது நமக்கு கடினமாகதான் தோன்றும். ஆனால் அதற்கு பலன், நிச்சயம் ஆண்டவரிடத்திலிருந்து வரும்.





# தேவ செய்தி

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானசகோதர,சகோதரிகளுக்கு, இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

**தகுதியற்றவர்களை தகுதிப்படுத்துகிறவர்**

உலகபிரகாரமான தகுதி எதுவும் இல்லாதவர்களை ஆண்டவர் அழைத்து உன்னதமான பணியினை செய்ய தகுதி படுத்துவதை வேதத்தில் காண்கிறோம். இயேசுகிறிஸ்துவும் தகுதியற்ற அனைவரையும் தமக்கு சீஷசர்களாக தெரிந்து கொண்டார். உன்னதமான தமது ஊழியத்திற்கு தகுதியானவர்களாக மாற்றினார். ஆம் கடவுளின் செயல்பாடுகள் எப்பொழுதுமே வித்தியாசமானவைகள். நாம் நினைக்கும் கோணத்தில் எப்பொழுதுமே அவர் செயல்படுவதில்லை, காரணம் வேதம் கூறுகிறது ஏசாயா 55:8,9ல் 8. என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல வென்று கர்த்தர் சொல்லுகிறார். 9. பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ,அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" என்று.

## லேவி

மாற்கு 2:14-16 ஆயத்துறையில் உட்கார்ந்து இருந்து லேவி என்ற ஆயக்காரனை இயேசுகிறிஸ்து ' நீ எனக்கு வேண்டும்' என சீடனாக அழைத்தார், உடனடியாக அவன் ஆண்டவரை ஏற்றுக் கொண்டு இயேசுவுக்கு சீடனானான்.

அவன் வீட்டிலே இயேசுகிறிஸ்து உணவருந்துக் கொண்டிருக்கும் பொழுது அநேகர் முறுமுறுத்து இவர் பாவியான மனிதன் வீட்டிற்கு எப்படி போகலாம், என வினா எழுப்பினார்கள், அப்பொழுது இயேசு நீதிமான்களையல்ல, பாவிகளையே மனம் திரும்ப அழைக்க வந்தேன், என்றும் பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை எனபதிலுரைத்தார்.

பிரியமானவர்களே பாவியான மனுஷனை உன்னத ஊழியக்காரனாக இயேசுகிறிஸ்து உருமாற்றினார், அதுதான் இயேசுவின் அன்பு, 'குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.' (யோவான் 8:36) பாவியும் நீசனுமான லேவி இயேசுவின் சீடனாக மாறினான் என்றால், நம்மையும் அவர் தமது மகனாக ஏற்றுக் கொள்வார் என்பதில் சந்தேகமில்லை. தைரியமாய் இயேசுவிடம் வருவோம் நம்பாவ அக்கிரமங்களை அவரிடம் அறிக்கை செய்வோம் அவருடைய பிள்ளைகளாக மாறி விடுதலை பெற்று

*சுதந்திர வாழ்வை அனுபவிப்போம்.*

# தாவீது

*சங்கீதம் 78:70-71 தமது தாசனாகிய தாவீதை தெரிந்து கொண்டு ஆட்டு தொழுவத்திலிருந்து அவனை எடுத்தார், கறவை ஆடுகளுக்கு பின்னாக திரிந்த அவனை தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும், தம்முடைய சுதந்திரமாகிய இஸ்ரவேலையும். மேய்பதற்காக அழைத்து கொண்டு வந்தார். அவர்களை தன் இருதயத்தை உண்மையின் படியே மேய்த்து தன் கைகளின் திறமையினால் அவர்களை நடத்தினான், தாவீது ஒருசிறந்த விசுவாசி, இஸ்ரவேல் மக்கள் நிந்தித்த கோலியாத் என்ற ராட்ஷசனை பார்த்து ஆடு மேய்கிற சாதாரண மேய்ப்பனான ஒரு தாவீது சொன்னான், 'நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடயத்தோடும், என்னிடத்தில் வருகிறாய், நானோ நீ நிந்திக்கிற இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தில் உன்னிடத்தில் வருகிறேன், இன்றைய தினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்பு கொடுப்பார்" கர்த்தர் பட்டயத்தினாலும், ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல! என்று இந்த ஜன கூட்டமெல்லாம் அறிந்து கொள்ளும் யுத்தம் கர்த்தருடையது அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக் கொடுப்பார் என்றான்.*

*இப்படி சொல்லி ஒரு சிறிய கவன் கல்லை அந்த ராட்ஷசன் மேல் எறிந்து அவனை கொன்றான். தாவீதுக்கு இருந்த விசுவாசத்தை பாருங்கள், சோதனை நேரங்களில், நெருங்கங்களின் நேரங்களில், என்ன செய்வதென்று நாம் கலங்காமல் தாவீது போல விசுவாச வார்த்தைகளை பேசுவோம். காரணம் நம் தேவன் நம்மை ஒரு போதும் கைவிடாத தேவன், நம் முகங்கள் வெட்கம் அடையாதபடி பாதுகாப்பார் அதனால் நம் இருதயம் பதறாதிருப்பதாக.*

*தாவீது விசுவாசித்தான், ஜெயம் பெற்றான் கறவலாடுகள் பின்னால் பாடல்களை பாடிக்கொண்டு திரிந்தவனை ராஜாவாக மாற்றி முழு இஸ்ரவேல் தேசத்தையும், ஆளும்படிக்கு ராஜ ஆளுகையை ஆண்டவர் தாவீதுக்கு கொடுத்தார்.*

*நம் தேவனாலே செய்யக்கூடாத அதியமான காரியம் ஒன்றுமில்லை(எரே 32:27) மரியாளை பார்த்து தேவ தூதன் சொன்னான் "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை" என்று (லூக்கா 1:37)*

# பெசலயேல்

*(யாத்திராகமம் : 35:30-55) பாருங்கள் கர்த்தர் ஊழியன் குமாரன் பெசலெயேலை பெயர் சொல்லி அழைத்து அவன் விசித்திர வேலைகளை யோசித்து சொல்லவும் பொன்னிலும், வெள்ளியிலும், வேலை செய்யவும். இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டி பதிக்கவும், மரத்தில் சித்திர வேலை செய்து சகல விநோதனமான வேலைகளை செய்யவும் அவனுக்கு ஞானத்தையும் புத்தியையும் அறிவையும் அருளி அவன் சகல வித வேலை-*

களையும் செய்யும்படி தேவ ஆவியினாலே அவனை நிரப்பினார். அவனுக்கு போதிக்கும் வார்த்தையும் அருளினார் சித்திர வேலையையும், சிற்ப வேலை-யையும், இரத்தாம்பர நூலாலும், சிவப்பு நூலாலும் மெல்லிய பஞ்சு நூலாலும் செய்யப்படும் விசித்திர தையல் வேலையையும், சகல விசித்திர நெசவு வேலைகளையும் வினோதமான வேலைகளை யூகிக்கிறவர்களும் செய்கிறவர்களும் நிறைவேற்றும் சகல வேலைகளையும், செய்யும்படிக்கு அவனுடைய இதயத்தை ஞானத்தினால் நிரப்பினார்.

கர்த்தர் வந்து இறங்கும் ஆசாரிப்பு கூடாரத்தை அலங்கரிப்பதற்காக எங்கோ ஒரு மூலையில் கிடந்த சாதாரண குடும்பத்தில் இருந்து பெசலயேல் என்ற மனிதனை தேவன் பெயர் சொல்லி அழைத்தார். தச்சு வேலை, சிற்ப வேலை, நெசவு வேலை, பொற்கொல்லர் பணி, சித்திரவேலை. தையல்கலை, என அனைத்து வித தாலந்துகளையும், கொடுத்து போதிக்கும் வரத்தையும் தேவன் கொடுத்தார்.

அவனை தேவ ஆவியினால் நிறைத்து, ஞானத்தினால் அலங்கரித்து, வரங்களினாலே மகிமைபடுத்தினார். எத்தனை ஆச்சர்யம் பாருங்கள், நம் தேவன் எத்தனை மகத்துவமுள்ளவர் பாருங்கள். ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார், பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவை-வகளைத் தெரிந்துகொண்டார்(1 கொரி 1:27)

# மோசே

(யாத்திராகமம்: 4:10-16) இஸரவேல் ஜனங்களை அடிமைதனத்திலிருந்து விடுதலை செய்து எகிப்து தேசத்திலிருந்து பாலும் தேனும் ஓடுகிற கானான்தேசத்துக்கு வழி நடத்தி செல்ல ஒரு தலைவனை ஆண்டவர் தெரிந்தெடுத்தார் அவன்தான் மோசே ஆனால் அவனோ மந்த நாவும் திக்கு வாயும் உள்ளவன், பார்வோனிடத்தில் பேசுவதற்கு கொஞ்சமும் தகுதியற்றவன். ஆனால் தேவன் அவனை அழைத்தார்.

மோசே கர்த்தரை நோக்கி ஆண்டவரே, இதற்கு முன்னதாக தேவரீர் உமது அடியேனோடே பேசியதற்கு பின்னாவது நான் வாக்கு வல்லவன் அல்ல நான் திக்கு வாயும், மந்த நாவுள்ளவன் என்றான். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி மனுஷனுக்கு வாயை உண்டாக்கியவர் யார்? ஊமையனையும்,செவிடனையும், பார்வையுள்ளவனையும், குருடனையும்,உண்டாக்கியவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா? ஆதலால் நீ போ நான் உன் வாயோடு இருந்து நீ பேச வேண்டியதை உனக்கு போதிப்பேன்., என்றார். இப்படி மோசேயை தேற்றி அவனுக்கு வாயாக செயல்படுவதற்கு ஆரோனை அவனுக்கு துணையாக கொடுத்தார்.

பலவீனத்தின் மத்தியிலும் ஒரு உதவியாளரை கொடுத்து அந்த பலவீனத்தை தாங்கும்படி ஒரு வழியை திறந்து கொடுத்து எப்படியாவது தமது அழைப்பை தேவன் நிவேற்றுகிறார். அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும் தேவரீர் நீர் சகலத்தையும் செய்ய வல்லவர் நீர் செய்ய நினைத்து தடை படாது என்பதை அறிந்திருக்கிறேன் என யோபு சொன்னது

(யோபு 42:2) சோதனையோடு கூட சோதனைக்கு தப்புவிக்கிற ஒரு வழியை ஆண்டவர் ஏற்படுத்துகிறார் எப்படியாவது தன்னுடைய ஊழியத்தை நிறைவேற்றுவாராக தகுதிபடுத்துகிறார். மோசே எவ்வளவு அழகாக இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்தில் வழிநடத்தினார் எவ்வளவு சாந்தமுள்ளவராய் இருந்தார். எப்படி தன் மக்களுக்கு தேவனிடம் மன்றாடினார் என்பதையெல்லாம் யாத்திராகமம் புத்தகத்தில் பார்க்கிறோம். நம் தேவன் ஆலோசனையில் ஆச்சர்யமானவர் செயலில் மகத்துவமுள்ளவர்

## கிதியோன்

(நியாதிபதிகள் 6:15-16) மீதியானியிரிடமிருந்து இஸ்ரவேல் மக்களை பாதுகாக்கும்படி மிகவும் திகிலான சூழ்நிலையில் கிதியோனை ஆண்டவர் அழைத்தார்.

அவனோ மீதியானிருக்கு பயந்து வீட்டின் பின்புறம் ஒளிந்து கொண்டிருக்கிறான் ஆண்டவரோ அவனை பார்வையிலே அவன் பராக்கிரசாலி. என்று அழைக்கிறார்.

கொஞ்சமும் சம்மந்தமில்லாத அழைப்பு அவனோ ஒரு பயத்தாங்கொள்ளி ஆனால் ஆண்டவர் பார்வையிலே அவன் பராக்கிரசாலியே அல்லேலூயா!
கிதியோன் சொல்கிறான் மனாசே என்பது மிக சிறிய கோத்திரம் அதிலும் அவன் குடும்பமோ மிக சிறியது தன்னை போய் தேவன் பராக்கிரமசாலியே என சொல்ல வேண்டிய சாராம்சம் என்ன? என வினவுகிறேன்.
அப்பொழுது ஆண்டவர் சொன்னார் உன்னை அனுப்புகிறது நான் அல்லவா? என்று தேவாதி தேவன் ஒருவனுக்கு துணை நிற்க்கும் போது அவன் மெய்யாகவே பராக்கிரமசாலியாக மாறிவிடுகிறான்.

ஆண்டவர் சொன்னார் நான் உன்னோடே கூட இருப்பேன் ஒரு மனுஷனை முறியடிப்பது போல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார். சொன்னவர் நிறைவேற்றியும் முடித்தார்.

பிரியமானவர்களே பாவியை சீடனாக்கினவர் ஆடு மேய்க்கிறவனை அரசராக்கினார் திறமையற்றவனை வல்லவனாக்கினார் திக்குவாயனை தலைவனாக்கினவர், பயத்தாங் கொள்ளியை பராக்கிரமசாலியாக்கினவர் உங்களை கொண்டும் பெரிய காரியங்களை செய்வார் காரணம் உங்களை தகுதிபடுத்துகிறவர் வானத்தையும் பூமியையும் சிறப்பித்தவர் மனுஷனுக்கு சுவாசத்தை கொடுக்கிறவர் ஆராய்ந்து முடியாத அதிசயங்களையும் செய்கிறார் (யோபு 9:10)ஆகவே தைரியமாயிருங்கள் எப்பொழுதும் சந்தோஷமாக இருங்கள் எல்லகாரியங்களிலும் நம்பிக்கையாருங்கள் தேவன் பெரிய காரியங்களை உங்கள் வாழ்க்கையிலும் செய்வார் !

கிறிஸ்துவுக்குள் அன்பு

சகோதரர். **ஸ்டாலின்**



# 2012 ஜூலை மாத வேத வினா பகுதி

1. தன் [illegible] மாலையை [illegible] போடுகிறான்? இவன் யார்?
2. எது முக மலர்ச்சி தரும்?
3. திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான் என்றது யார்?
4. தன் [illegible]கயிறுகளால் கட்டப்படுகிறவன் யார்?
5. அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான் என்று வாசிப்பதெங்கே?
6. யாருடைய கை செல்வத்தை உண்டாக்கும் ?
7. இரண்டு மனு உன்னிடத்தில் கேட்கிறேன் என்றது யார்?
8. யாருக்கு [illegible] கேடு?
9. பட்டிணத்தில் தீ கொளுத்தி விடுகிறவர்கள் யார்?
10. நீதிமான்களோடு கர்த்தருடைய ரகசியம் இருக்கிறது என்றது யார்??
11. அம்பு யாருடைய ஈரலை பிளந்தது?
12. பசியுள்ளவனுக்கோ கசப்பான பதார்த்தங்களும் தித்திப்பாய் இருக்கும் என்றது யார்?
13. முற்கோபி எதை செய்வான் ?
14. [illegible] விழுங்குவதுபோல் குற்றமற்றவர்களை [illegible] விழுங்குகிறவர்கள் யார்?
15. மூடனை உரலில் போட்டு உலக்கையினால் நொய்யோடே நொய்யாக [illegible] குறித்து எழுதியது யார்?

1. மோசே (யாத்திராகமம் 11:7)
2. எலிசபாள் (யாத்திராகமம் 6:23)
3. [illegible] (யாத்திராகமம் 18:2)
4. மோசே (யாத்திராகமம் 34:29)
5. கர்த்தர் (யாத்திராகமம் 3:2)
6. எத்திரோ (யாத்திராகமம் 3:1)
7. மோசே (யாத்திராகமம் [illegible])
8. பார்வோன் (யாத்திராகமம் 9:27)
9. மோசே (யாத்திராகமம் 11:3)
10. கர்த்தர் (யரத்திராகமம் 23:8)
11. சிப்போராள் (யாத்திராகமம் 4:25)
12. மோசே (யாத்திராகமம் 24:4)
13. [illegible] (யாத்திராகமம் 15:10)
14. எகிப்தியர் (யாத்திராகமம் 15:5)
15. பார்வோன் (யாத்திராகமம் 14:7)

## 2012 ஜுன் மாத வேத வினாவிற்கு விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| சகோதரி. செலின் டேவிட் ஜெயக்குமார் | சகோதரி. மரகதம் ஸ்டீஃபன் |
| சகோதரி. சுகந்தி ஜெயகுமார் | சகோதரி. கீதா ஜெயகுமார் |
| சகோதரி. ஜெபா | சகோதரி. அனுஷூயா டேவிட்சன் |
| சகோதரி. பத்மினி வர்கீஸ் | சகோதரி. சாந்தி ஸ்ரீனிவாசன் |
| சகோதரி. லதா கிறிஸ்டோபர் | சகோதரி. மெர்லின் ஜோன்ஸ் |
| சகோதரி. [illegible] | சகோதரி. [illegible] எசேக்கியேல் |
| சகோதரி. அனிதா ஆரோக்கியதாஸ் | சகோதரி. ஜரின் பிரீட்டா சிங் |
| சகோதரி. ஜாஸ்லின் | சகோதரி. ஜான் |
| சகோதரி. [illegible] | |

விடைகளை வருகின்ற **20-07-2012** க்குள் சபையின் செயலாளரிடம் நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை நீதிமொழிகள் புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்.

பலங்கொண்டு திடமனதாயிரு திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்என்றார். யோசுவா 1:9

# 2012 ஜூலை மாத வேத வினா பகுதி

1. தன் ஆத்துமாவை கெடுத்து போடுகிறான்? இவன் யார்?

2. எது முக மலர்ச்சி தரும்?

3. திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான் என்றது யார்?

4. தன் பாவக்கயிறுகளால் கட்டப்படுகிறவன் யார்?

5. அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான் என்று வாசிப்பதெங்கே?

6. யாருடைய கை செல்வத்தை உண்டாக்கும் ?

7. இரண்டு மனு உன்னிடத்தில் கேட்கிறேன் என்றது யார்?

8. யாருக்கு ஒரு கேடும் வராது?

9. பட்டிணத்தில் தீ கொளுத்தி விடுகிறவர்கள் யார்?

10. நீதிமான்களோடு கர்த்தருடைய ரகசியம் இருக்கிறது என்றது யார்??

11. அம்பு யாருடைய ஈரலை பிளந்தது?

12. பசியுள்ளவனுக்கோ கசப்பான பதார்த்தங்களும் தித்திப்பாய் இருக்கும் என்றது யார்?

13. முற்கோபி எதை செய்வான் ?

14. பாதாளம் விழுங்குவது போல் குற்றமற்றவர்களை உயிரோடு விழுங்குகிறவர்கள் யார்?

15. மூடனை உரலில் போட்டு உலக்கையினால் நொய்யோடே நொய்யாக குத்துவதை குறித்து எழுதியது யார்?

விடைகளை வருகின்ற **20-07-2012** க்குள் சபையின் செயலாளரிடம் நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை **நீதி மொழிகள்** புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்: உன் தேவனாகிய கர்த்தர்....... உன்னை ஆசீர்வதிப்பார்.

உபா 28:8

## இந்த மாதம் பிறந்த நாளைக் சிறப்பிக்கிறவர்கள்

பேபி. அஃபியா ஆரோக்கியதாஸ் பேபி. டெலின் ஜெர்வின் ஃபிராங்ளின்
பேபி. ஜீயோனா ஷேரன் செல்வசிங்

செல்வன். ஜோசப் பிரின்ஸ் செல்வன். ஆல்வின் ஜீலியஸ் தம்புகுமார்
செல்வன். ரூபன் பொன்ராஜ் செல்வன். ஏனோக் ஜோன் மாற்க் ஆண்டனி
செல்வன். சப்ரியன் தீமோத்தேயு செல்வன். சத்தீஷ் ஜெயசந்திரன்
செல்வன். கபிலன் பால் புருஷோத்தமன் செல்வன். சைமன் ஜெயகுமார்
செல்வன். ஜோசப் ஜான் செல்வன். மோனித் வெங்கடேஷ்

செல்வி - ஜெனிடா விசு செல்வி. லீனா வில்கின்ஸ
செல்வி. ஜோஸ்பின் அந்தோனிசாமி

சகோதரி. ஹெப்சிபாய் ஜேம்ஸ் சகோதரி. ரூத் ஷீபா பிராங்
சகோதரி. சாந்தி ஜெயசேகர் சகோதரி. பவானி
சகோதரி. விக்டோரியா ஜான் சகோதரி. எஸ்தர் ராணி
சகோதரி. மேகலா ஆஸ்டின் சகோதரி. ஜெபராணி தர்மர்
சகோதரி. கிறிஸ்டி சாயா சந்திரா டேனி

சகோதரர். ஸ்ரீதர் சகோதரர்.சத்தியநாதன் சகோதரர். F.தாமஸ்
சகோதரர்.ஸ்டாலின் சகோதரர். அசோக் குமார் சகோதரர். தாஸ்
சகோதரர். சத்தீஷ்குமார் எத்திராஜ் சகோதரர். ஆல்விக் டேனி
சகோதரர். ஜேம்ஸ் மரிய ஞானம் சகோதரர். எட்வர்ட் ராஜா
சகோதரர். தன்ராஜ்

......கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்........ உபா 28:12

## இந்த மாதம் திருமண நாளைக் சிறப்பிக்கிறவர்கள்

திருமதி—திரு சாமுவேல் ஜான்ஸன் திருமதி—திரு. பக்தராஜ்
திருமதி—திரு. ஜோன்ஸ் செல்வா சிங் திருமதி—திரு. அசோக்குமார்
திருமதி—திரு. முத்தையா திருமதி—திரு. சதீஷ்குமார்
திருமதி—திரு. ஜஸ்டின் திருமதி—திரு ரிச்சர்ட் டேனியல்

# 2012 ஜூலை மாத ஆலய ஆராதனை

**வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4 -45 முதல் 6-20 வரை**

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06-07-2012 | சகோ. ஜெயசேகர் | சகோ. ரவிச்சந்திரன் |
| 13-07-2012 | சகோ.தாமஸ் ரவீந்திரன் | சகோ. ஸ்டீ:பன் |
| 20-07-2012 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 27-07-2012 | (சகோ. விசு.) | Family service |

**ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5-00 முதல் 6-15 வரை**

| நாள் | செய்தி |
|---|---|
| 01-07-2012 | சகோ. சுகுமாரன் |
| 08-07-2012 | சகோ. ஸ்டாலின் |
| 15-07-2012 | சகோ. ஐசக்துரை |
| 22-07-2012 | சகோ.பால் ஜெகநாதன் |
| 29-07-2012 | சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ் |

12/07/2012 அன்று முழு இரவு ஜெபம்
**இடம் : பரிசுத்த பவுல் ஆலயம், அஹமதி குவைத்.**
**நேரம் : இரவு 11:00 முதல் காலை 3:00 மணி வரை**

11/07/2012 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை
**இடம் : சகோதரி. கிறிஸ்டி முத்தையா அவர்கள் இல்லம் அபுஹலி:பா**

27/07/2012 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை

**இடம் பின்னர் அறிவிக்கப்படும்**

# குடும்ப பகுதி

## கிறிஸ்தவ குடும்பம் பரலோகத்தின் வாசல்

### கர்த்தரையே சேவித்தல்

*ரோமர் 12:11-ல் அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள் ஆவியிலே அனலாயிருங்கள் கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள். என்று ஊழியம் செய்வதற்கே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். மறுபடியும் பிறந்த ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைகளையும் கர்த்தரை சேவிக்க வேண்டும். யோசுவாவின் அறிக்கையோ, தான் தன் வீட்டாரோடு கர்த்தரை சேவிப்பதே. யோசுவா 24:15ல் சொல்லுகிறார். நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்.*

*தேவனுடைய வசனத்தில் இருந்து நாம் கர்த்தரை எப்படி சேவிக்கவேண்டும். என்பதை சுருக்கமாக பார்ப்போம்.*

### *1.* கர்த்தரை சேவியுங்கள்.

*முதல் முதலாக நாம் கர்த்தரையே சேவிப்பதை தீர்மானித்து தெரிந்தெடுக்க வேண்டும். யோசுவா தைரியமாக அறிவிக்கிறார். (யோசுவா 24:15) ஆம் நாம் கர்த்தரை மாத்திரம் சேவிக்க வேண்டும் நாங்கள் கர்த்தரையே சேவிப்போம் என்று சொல்லுகிறவர்களும் சிலர் இருக்கிறார்கள். அதாவது கர்த்தரை சேவிப்பதோடு வேறு யாரையும் சேவிப்பது என்று அர்த்தம். இது கூடாத காரியம்.*

*நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்னார் 'இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனை பகைத்து மற்றவனை சிநேகிப்பான். அல்லது ஒருவனை பற்றிக் கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும் உலக பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது. (மத் 6:24) உலகத்தில் இரண்டு எஜமான்கள் உண்டு. ஒருவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மற்றது பிசாசு, பிசாசு அல்லது உலகம், நாம் ஒருபோதும் இருவருக்கும் பிரியமாக நடக்க முடியாது. நீங்கள் ஒருவரை நேசித்து மற்றவரை வெறுக்க வேண்டும். அல்லது ஒருவரை பற்றிக் கொண்டு மற்றவரை அசட்டை பண்ண வேண்டும்.*

*நீங்கள் இயேசுவில் அன்பு வைத்து அவரை பற்றிக் கொண்டிருக்கிறாயா?*

### *2.* முழு இருதயத்தோடு கர்த்தரை சேவியுங்கள்.

*இரண்டாவது நாம் முழுஇருதயத்தோடும் கர்த்தரை சேவிக்க வேண்டும் (உபா 10:12)ல் நாம் வாசிக்கிறோம். இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ*

உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்புகூர்ந்து, உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவி. உன் முழு இருதயத்தோடும் சேவிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்கிறார். அரை மனதுடன் அல்ல. ஆதனால் உன்னுடைய முழுமனதுடனே சேவிக்க வேண்டும். சாதாரணமாக குழந்தைகள் நாங்கள் 35 % மதிப்பெண் எடுத்தால் மேல் வகுப்புக்க மர்ற்றப்படுவார்கள் என்று சொல்லுவது வழக்கம். நம்முடைய தேவன் வைராக்கியமுள்ள தேவன், அவருக்கு நம் முழு இருதயம் வேண்டும். நம்முடைய இருதயத்தின் 99 % அல்ல நம்முடைய இருதயத்தை 100 % தேவன் விரும்புகிறார். (கொலோ 3:24) ல் நாம் வாசிக்கிறோம். எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள். ஆகையால் நீ உன் முழு இருதயத்தோடும் கர்த்தரை சேவிக்க வேண்டும். எனவேதான் நாம் 1 சாமுவேலின் புத்தகத்திலே இப்படியாக நீங்கள் எப்படியும் கர்த்தருக்கு பயந்து உங்கள் முழு இருதயத்தோடும் உண்மையாய் அவரை சேவிக்க கடவீர்கள்.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள் கடந்த 6 வருடங்களாக இந்த செய்தி மலர் ஊழியத்தை நடத்த தேவன் செய்ய பெரிய உபகாரங்களுக்காக தேவனுக்கும் இந்த காரியத்துக்கு ஒத்துழைப்பு கொடுத்த அனைத்து செய்திமலர் வாசகர்களுக்கும் இதை உருவாக்க ஒவ்வொரு மாதமும் எனக்கு உறுதுணையாய் இருந்த சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும், என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். குறைகளை குற்றங்கள் அநேகம் உண்டு, ஆனாலும் பொருத்துக் கொண்ட அன்பு உள்ளங்களுக்கு மீண்டும் ஒரு முறை கூட என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து நன்றியை தெரிவிததுக் கொள்கிறேன். இதற்கு எனக்கு ஒவ்வொரு இரண்டு வருடங்களிலும் எந்த ஒரு அதிருப்பியும் இன்றி அனுமதி அளித்த சபையின் அந்தந்த காலகட்டத்தில் இருந்த செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இதை பற்றி ஒன்றும் தெரியாத நேரத்தில் இதற்கு உறுதுணையாய் இருந்த அன்பு சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு மாதமும் வேத வினா ஆயத்தப்படுத்தி கொடுத்து அதனுடன் பரிசையும் கொடுத்து உபகரித்த குடும்பங்களுக்கும் என் நன்றியை இயேசுவின் நாமத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்

இங்ஙனம்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன். ஜேசக்துரை

# கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாகக்கடவோம்

# (Being ready for the coming of Christ )

**உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தில் உண்மையுள்ளவராய் இருங்கள்!**

*(மத்தேயு 25:14-30)- அந்தரங்க ஜீவியத்தில் ஆயத்தமாயிருக்கும்படி பத்து கன்னிகைகளின் உவமையை கூறி முடித்தபின் இயேசு இந்த இரண்டாவது உவமையை கூறினார். தேவன் நம் ஒவ்வொருவருக்கும் தந்த தாலந்துகளை உண்மையோடு உபயோகிக்க வேண்டும் என வலியுறுத்தவே இந்த இரண்டாவது உவமையை இயேசு கூறினார். இந்த தாலந்துகள் யாதெனில் : நமக்கு சொந்தமான உடமைகள், பணம், சுபாவமான திறமை, வாழ்க்கையில் கிட்டும் சந்தர்ப்பங்கள். நேரங்கள் மற்றும் ஆவிக்குரிய வரங்கள், ...... போன்றவைகளேயாகும். நாம் எல்லோரும் தாலந்துகளை ஒரே சமமாய் பெற்றிறுக்கவில்லை, எப்படியெனில் இந்த உவமையில் ஒருவன் ஐந்து தாலந்துகளையும் மற்றொருவன் இரண்டு தாலந்துகளையும் வேறொறுவன் ஒரு தாலந்தையும் உடையவர்களாய் இருந்தனர். இருப்பினும் வித்தியாசமான அளவில் தாலந்துகளை பெற்ற இவர்கள், கிடைக்கும் சந்தர்ப்பத்தை உபயோகிப்பதில் சரிசமமான நிலையிலே இருந்தனர். எவரிடம் அதிகம் கொடுக்கப்பட்டதோ, அவரிடம் மாத்திரமே அதிகம் கேட்கப்பட்டது, எனவேதான் தன்னுடைய இரண்டு தாலந்தை நான்காகப் பெருக்கியவன், ஐந்து தாலந்துகளை பத்தாக பெருக்கிக் கொண்ட மனிதன் பெற்ற அதே பலனைப்பெற்றான். காரியம் இவ்வாறாக இருந்ததின் நிமித்தமே ஒரு தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தவன் மீது ஆக்கினை தீர்ப்பு வந்தது. (வசனம் 18) இவன் தன்னுடைய தாலந்தை தேவனுக்காக உபயோகிக்காமல் 'நிலத்தில்' அதாவது இப்பூமிக்குரியவைகளாகவே செலவழித்தான்.*

*நம்மில் ஒருவர்கூட 'தேவன் எனக்கு ஒரு தாலந்தையும் தரவில்லை!' என கூறவே முடியாது ஏனெனில் நாம் எல்லோருமே தேவனிடத்திலிருந்த ஏதாகிலும் சில தாலந்துகளை பெற்றிருக்கதான் செய்கிறோம். இப்பொழுது நம்மை அண்டிவரும் கேள்வியெல்லாம் 'இந்த தாலந்துகளை நாம் எதற்கு உபயோகபடுத்தப் போகிறோம்?' என்பதுதான்.*

*நாம் நமக்கென இவ்வுலகத்தில் உபயோகிப்பது, பூமியில் தாலந்தை புதைத்து வைப்பதற்கு ஒப்பாகும். தேவனுடைய மகிமைக்கென உபயோகபடுத்தப்பட்ட தாலந்துகள் மாத்திரமே நித்தியத்தில் ஆதாயமாக கணக்கிடப்படும்.*

*இந்த தரத்தின்படி சீர்தூக்கி பார்க்கும்போது இன்றைக்கு அநேக விசுவாசிகள் மகா தரித்திரத்தில் இருப்பதையே காண்கிறோம். 'எல்லாம் தேவனுக்கே' எனக்கென்று எதுவும் வேண்டாம்' என்பதே நம் வாழ்வின் லட்சியமாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின் வருகைக்கு நீங்கள் ஆயத்தத்துடன் இருக்கிறீர்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது. நமக்குண்டான யாரையும் வெறுக்காத பட்சத்தில் நாம் ஒரு போதும் இயேசுவின் சீஷனாய் இருந்திடவே முடியாது.*

*ஒருவன் தேவன் தனக்கு தந்த எல்லா உடமைகளையும் தாலந்துகளையும் ஆண்டவருக்காகவே உபயோகிக்காமல் இருந்து கொண்டு 'நானும் கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாய்தான் இருக்கிறேன்!' என கூறுவானென்றால் அவனும் தன்னைதானே ஏமாற்றிக் கொண்டவனேயாவான்.*

# St. Paul's Church

# Ahmadi Tamil Congregation

## Talents Show Competition for Children

## 3rd Week of August 2012*

### Nursery Group [LKG &UKG]

**Fancy dress(any bible character – talk 2 to 3 lines)**

**Song (any spiritual Christian song – 3 minutes)–English or Tamil**

### Primary Group [Std. 1 & 2]

**Psalms 121 (English King James Version or Tamil)**

**Song(any spiritual Christian song – 3 minutes) – English or Tamil**

### Juniors [Std. 3 to 5]

**Story telling (any bible story - 3 minutes) – English or Tamil**

**Song (any spiritual Christian song – 3 minutes) – English or Tamil**

### Intermediate [Std. 6 & 7]

**Instrumental Music(Any Instrument) for Christian songs without beats & accompaniment Mono-Acting – (Topic-Saul's encounter with God on Damascus Road)**

### Seniors [Std. 8 to 12]

**Bible Quiz (Book of Job)**

**Preaching (5 minutes Topic: God's love)**

**Dear children,**

**Come, Participate & Glorify the Name of God.**

**Show your Talents & Win Attractive Prizes!**

**Don't hide your talents! Lord, thou deliveredst unto me five talents: behold, I have gained beside them five talents more.His lord said unto him, Well done, thou good and faithful servant: thou hast been faithful over a few things, I will make thee ruler over many things: enter thou into the joy of the lord .Matthew 25: 20, 21**

***Exact date will be announced later**

**Sunday School Teachers**

# வெற்றி!

இளைஞன் ஒருவன் போதகரிடம் சென்று, "ஐயா நான் எப்போதுமே தோற்றுக்கொண்டே இருக்கிறேன். என்னால் வெற்றியுடன் எக்காரியத்தையும் சாதிக்கவே முடியவில்லை. நான் என்ன செய்வது என்று எனக்குப் புரியவே இல்லை. நான் வெற்றி பெறுவதற்கு உரிய வழிமுறைகள் ஏதாவது இருந்தால் கூறுங்கள்" என்று கேட்டார்.

"தம்பி வெற்றி பெற வேண்டும் என்று உனக்கு உண்மையிலேயே ஆசை இருந்தால், நீ வெற்றி நோக்குக் கொண்டவனாக இருக்க வேண்டும். மாறாகத் தோல்வி அடைந்து விடுவோம் .

"முதலில் உனக்கு வேண்டியவற்றை தேவனிடத்தில் கேள், மற்றவர்களை உன் பக்கம் கவர்ந்திழுக்குமாறு ஆண்டவருடைய சாயலை பெற்றுக்கொள். அதற்கு ஒரே வழி நீ உன் மனதில், சுமந்து கொண்டிருக்கக்கூடிய வருத்தங்கள், கவலைகள் ஆகியவற்றை தேவனிடத்தில் ஒப்படைத்துவிடு. எவன் ஒருவன் கழுதை பொதியைச் சுமப்பதுபோல, தன் மனதுக்குள்ளே கவலைகள், வருத்தங்கள் போன்றவற்றை சுமந்து கொண்டு திரிகிறானோ அவன் தேவசாயலை ஒருநாளும் பெற முடியாது.

"இரண்டாவதாக, இவ்வுலகில் எல்லாவற்றையும் பெற்று, மிக அமோகமாக, ஆடம்பரமாக வாழ வேண்டும் என்று மனதிற்குள்ளே ஆசைப்படாதே. அவ்வாறு நீ செய்தால்தான் உன் உள்ளத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் தரித்திரம், எழ்மைத் தன்மை, வறுமை ஆகியவற்றிலிருந்து நீ விடுதலை பெறுவாய்.

"மூன்றாவதாக, எப்போதும் நீ நியாயத்தையே பேசு. அதனால் உன் மேல் சிலர் எரிச்சல் படலாம்; வருத்தப்படலாம். அதைப் பற்றி நீ கவலைப்படாதே. அது உன் பிரச்சினை அல்ல. அது அவர்களுடைய பிரச்சினை.

"நான்காவதாக, எதையும் உற்று நோக்கு, உன் பார்வையிலிருந்து எதுவும் விடுபட்டு விடக்கூடாது என்பது போல உன் பார்வை அத்தனைக் கூர்மையாக இருக்கட்டும்.

ஐந்தாவதாக, நீ எங்கே சென்றாலும் உன்னுடன் மகிழ்ச்சியையும் எடுத்துப்போ, அதை நீ வேறு எங்கேயும் தேடிப்பெற முடியாது.

"ஆறாவதாக, எப்போதும் நல்லதையே நினை. உன் எண்ணம் போலத்தான் நீ உருவாக்கப்படுகிறாய்.

"ஏழாவதாக, உன் மனதின் விருப்பப்படி நீ நடக்கக் கூடாது. தேவசித்தம் அறிந்துதான் நீ நடக்க வேண்டும்.

"எட்டாவதாக, உன்னால் வருத்தமுடனும், வாழமுடியும். மகிழ்ச்சியுடனும் வாழமுடியும். நீ எதைத்தேர்ந்து எடுக்கிறாய் என்று நீ தான் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

"ஒன்பதாவதாக, எளிதில் கிடைக்கும் எதுவும் சீக்கிரத்தில் உன்னைவிட்டு மறைந்து விடும். சிரமப்பட்டு, உழைத்துப் பெறப்படுவது தான் நீண்ட நாள் நிலைக்கும் என்பதை நினைவில் வை.

"பத்தாவதாக, தோல்வி மனப்பான்மை கொண்டவனாக இருக்காதே! அப்படிப்பட்டவனை உலகம் வெகு சீக்கிரத்தில் புறக்கணித்து விடும். "சந்தோஷத்தைத் தேடி நீ அலைய வேண்டியதில்லை. ஏனெனில், சந்தோஷம் உன் கூடவே இருக்கிறது என்பதை பதினொன்றாவது புத்திமதியாக எடுத்துக்கொள். "செய்ய முடியாது என்று மற்றவர்களால் நிராகரிக்கப்பட்ட ஒன்றை நீ செய்து காட்டும்படிக்கு ஆண்டவரிடம் ஞானத்தைக் கேள், உலகம் உன்னை மறக்காது. இது பன்னிரெண்டாவது அறிவுரை, என்றார். இளைஞன் அவருக்கு நன்றி கூறிவிட்டு, தெளிவான உள்ளத்துடன் திரும்பினான்.

# வெற்றி!

இளைஞன் ஒருவன் போதகரிடம் சென்று, ‘‘ஐயா நான் எப்போதுமே தோற்றுக்கொண்டே இருக்கிறேன். என்னால் வெற்றியுடன் எக்காரியத்தையும் சாதிக்கவே முடியவில்லை. நான் என்ன செய்வது என்று எனக்குப் புரியவே இல்லை. நான் வெற்றி பெறுவதற்கு உரிய வழிமுறைகள் ஏதாவது இருந்தால் கூறுங்கள்’’ என்று கேட்டார்.

‘‘தம்பி வெற்றி பெற வேண்டும் என்று உனக்கு உண்மையிலேயே ஆசை இருந்தால், நீ வெற்றி நோக்குக் கொண்டவனாக இருக்க வேண்டும். மாறாகத் தோல்வி அடைந்து விடுவோம் .

‘‘முதலில் உனக்கு வேண்டியவற்றை தேவனிடத்தில் கேள், மற்றவர்களை உன் பக்கம் கவர்ந்திழுக்குமாறு ஆண்டவருடைய சாயலை பெற்றுக்கொள். அதற்கு ஒரே வழி நீ உன் மனதில், சுமந்து கொண்டு திரியக்கூடிய வருத்தங்கள், கவலைகள் ஆகியவற்றைத் தேவனிடத்தில் ஒப்படைத்துவிடு. எவன் ஒருவன், கழுதை அழுக்குப் பொதியைச் சுமப்பதுபோல, தன் மனதுக்குள்ளே கவலைகள், வருத்தங்கள் போன்றவற்றை சுமந்து கொண்டு திரிகிறானோ அவன் தேவசாயலை ஒருநாளும் பெற முடியாது.

‘‘இரண்டாவதாக, இவ்வுலகில் எல்லாவற்றையும் பெற்று, மிக அமோகமாக, ஆடம்பரமாக வாழ வேண்டும் என்று மனதிற்குள்ளே ஆசைப்படு. அவ்வாறு நீ செய்தால்தான் உன் உள்ளத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் தரித்திரம், ஏழ்மைத் தன்மை, வறுமை ஆகியவற்றிலிருந்து நீ விடுதலை பெறுவாய்.

மூன்றாவதாக, எப்போதும் நீ நியாயத்தையே பேசு. அதனால் உன்மேல் சிலர் எரிச்சல் படலாம்; வருத்தப்படலாம். அதைப் பற்றிக் கவலைப்படாதே! அது உன் பிரச்சினை அல்ல. அது அவர்களுடைய பிரச்சினை.

‘‘நான்காவதாக, எதையும் உற்று நோக்கு, உன் பார்வையிலிருந்து எதுவும் விடுபட்டு விடக்கூடாது என்பது போல உன் பார்வை அத்தனைக் கூர்மையாக இருக்கட்டும்.

ஐந்தாவதாக, நீ எங்கே சென்றாலும் உன்னுடன் மகிழ்ச்சியையும் எடுத்துப்போ, அதை நீ வேறு எங்கேயும் தேடிப்பெற முடியாது.

‘‘ஆறாவதாக, எப்போதும் நல்லதையே நினை.. உன் எண்ணம் போலத்தான் நீ உருவாக்கப்படுகிறாய்.

‘‘ஏழாவதாக, உன் மனதின் விருப்பப்படி நீ நடக்கக் கூடாது. தேவசித்தம் அறிந்துதான் நீ நடக்க வேண்டும்.

‘‘எட்டாவதாக, உன்னால் வருத்தமுடனும், வாழமுடியும். மகிழ்ச்சியுடனும் வாழமுடியும். நீ எதைத்தேர்ந்து எடுக்கிறாய் என்று நீ தான் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

‘‘ஒன்பதாவதாக, எளிதில் கிடைக்கும் எதுவும் சீக்கிரத்தில் உன்னைவிட்டு மறைந்து விடும். சிரமப்பட்டு, உழைத்துப் பெறப்படுவது தான் நீண்ட நாள் நிலைக்கும் என்பதை நினைவில் வை.

‘‘பத்தாவதாக, தோல்வி மனப்பான்மை கொண்டவனாக இருக்காதே! அப்படிப்பட்டவனை உலகம் வெகு சீக்கிரத்தில் புறக்கணித்து விடும். ‘‘சந்தோஷத்தைத் தேடி நீ அலைய வேண்டியதில்லை. ஏனெனில், சந்தோஷம் உன் கூடவே இருக்கிறது என்பதை பதினொன்றாவது புத்திமதியாக எடுத்துக்கொள். ‘‘செய்ய முடியாது என்று மற்றவர்களால் நிராகரிக்கப்பட்ட ஒன்றை நீ செய்து காட்டும்படிக்கு ஆண்டவரிடம் ஞானத்தைக் கேள், உலகம் உன்னை மறக்காது. இது பன்னிரெண்டாவது அறிவுரை, என்றார். இளைஞன் அவருக்கு நன்றி கூறிவிட்டு, தெளிவான உள்ளத்துடன் திரும்பினான்.

# சகோதரிகள் பகுதி



## ஸ்தோத்தரியுங்கள் அற்புதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்

*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதரிகளுக்கு இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்திலே நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களையும்,மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.பெண்கள் மத்தியில் தேவனுக்கென்று ஊழியம் செய்ய ஒருமனதோடு தேர்ந்தெடுத்தமைக்காக ஒருவிசை கூட,தேவனுக்கும், உங்கனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாத்திரமல்ல இம்மாத தியானத்திற்கென்று தேவன் தந்த வேதப்பகுதி பரிசுத்த லூக்கா 18ஆம் அதிகாரம் வசனங்கள் 1 முதல் 8 வரை தியானிப்போமானால் ஒரு பட்டணத்திலே ஒரு ஏழை விதவை தனக்குண்டான வழக்கு ஒன்றில் நியாயம் வேண்டி அதே பட்டிணத்தை சேர்ந்த அநீதி நிறைந்த தேவ பயமற்ற, மனுஷரை மதியாத, ஒரு நியாயாதிபதியிடம் தன் வழக்கை தொடர்ந்தார். ஆனால் அவனோ அவர் வழக்கை குறித்த கரிசனையே இல்லாததிருந்தான். மாத்திரமல்ல வெகுகாலமாயும் மௌமாயிருந்தான். ஆனாலும் அந்த ஏழை விதவை சோர்ந்து போகாமல் எப்போதும் ஜெபம் பண்ண வேண்டும் (லூக்கா 18:1) என்ற வேத வசனத்திற்கேற்ப அவள் அந்த அநீதி நிறைந்த நியாயாதிபதியிடம் தினமும் தன் வழக்கை குறித்து முறையிட்டுக் கொண்டே இருந்தான் ஒரு நாள் வந்தது (அந்த நாள்தான் தேவனுடைய நாள்) அவனோ என்ன இந்த விதவை நம்மை என்றைக்கும் வந்து தொந்தரவு செய்து கொண்டிருக்கிறாள், மாத்திரமல்ல அடிக்கடி வந்து தன்னை அலட்டாதபடிக்கும் அவளுக்கு நியாயம் செய்ய வேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.(லூக்கா 18:5)*

*ஆம் தேவனுக்குள் மிகவும் பிரியமானவர்களே ஒரு வேளை நீங்களும் நீண்ட நாட்களாக வருஷங்களாக, ஜெபித்து, ஜெபித்து சோர்ந்த போன நிலையில் காணப்படலாம். இனி ஜெபிக்கின்ற நீங்கள் மாறாத தேவனை ஸ்தோத்தரியுங்கள், நிச்சயம் அற்புதத்தை பெற்றுக் கொள்வீர்கள். காரணம் ஸ்தோத்திரம் செய்கிவனுக்கு கிருபை பெருகும், என தேவன் கூறுகிறார்.*

*நீங்கள் வேண்டிக் கொண்டிருக்கிற எந்த ஆசீர்வதமானாலும் சரி ஒரு வேளைக்கு அது ஆவிக்குறிய ஆசீர்வாதங்களான இரட்சிப்புக்காக, அபிஷேகத்திற்காகவோ, ஊழிய அழைப்புக்காகவோ, அல்லது உலகப்பிராகாரமான ஆசீர்வாதங்களான, கடன் பாரம் நீங்கவோ, வியாதியில் இருந்து விடுதலையடையவோ, குடும்பத்தில் சமாதானம் நிலைநிற்கவோ, வருமை கஷ்டங்கள் நீங்கவோ, பிள்ளைகளது எதிர்கால வாழ்விற்காகவோ, அல்லது நமது எதிர்கால வாழ்க்கைக்காகவோ, இப்படி எந்த ஆசீர்வாதத்திற்காக ஜெபித்து மாமிசத்தில் நீங்கள் சோர்ந்து போயிருக்கிறீர்களா? பிரியமனவர்களே இனி நாம் ஸ்தோத்தரிப்போம்.. ஸ்தோத்திரம் செய்ய தொடங்குவோம் வசனம் இப்படி போதிக்கிறது பிலிப்பியர் 4:6 நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே*

*கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.என்று . கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரிகளே நேரம் கிடைக்கும் போதெல்லாம் தேவனுக்கு ஸ்தோத்திரத்தை செலுத்தி தேவனை ஆராதியுங்கள். யோசபாத்தை எதிர்த்து பெரிய சேனை யுத்தம் செய்ய வந்தது ஆவியில் கலக்கமடைந்த யோசபாத் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்து போன நிலை ,அவர்களை போரினால் வெல்ல எந்த வழியும் இல்லை, உடனே தன்னுடைய பாடல் குழுவிற்கு கட்டளையிட்டான் முன்பாக சென்று பாடி தேவனை ஆராதியுங்கள் என்று அவர்களுக்கு கட்டளை பிறப்பிக்கிறான், அவர்கள் பாடி தேவனை துதிக்க தொடங்கியதும் எதிரிகள் தங்களுக்குள்ளே வெட்டுண்டு மடிந்தார்கள். என்று வாசிக்கிறோம். அதே போல யூதாவுக்கு எதிராக வந்த விரோதிகளையும் துதி செய்து துரத்தினார்கள் என்று வாசிக்கிறோம் "அவர்கள் பாடித் துதிசெய்யத் தொடங்கினபோது, யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலைத் தேசத்தாரையும், ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தர் எழும்பப்பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள்." (2 நாளா 20:22)*


*நீங்களும் தேவனை துதித்து ஸ்தோத்தரித்து உங்களுக்கு சத்துருவான பிசாசினால் வரும் சோதனையில் இருந்து விடுதலை பெற்றுக்கொள்ளுங்கள் . யூதாவுக்கும் யோசபாத்திற்க்கும் வந்தது போன்ற பெரிய சோதனையில் இருந்து துதிக்கும் போது தேவன் பெரிய விடுதலையை கட்டளையிட்டார். அவருடைய பிள்ளைகளாகிய நமக்க தேவன் விடுதலை தருவது அதிக நிச்சயமல்லவா?*

*துதிசெய்ய தொடங்கியவுடனே வெகு சீக்கிரத்தில் உங்கள் எல்லா பிரச்சனைகளிலிருந்தும். விடுதலை ஆசீர்வாதம், நிச்சயம் பெற்றுக்கொள்வீர்கள் ஏனெனில் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராய் இருந்து நியாயம் செய்யாமலிருப்பாரோ அதி சீக்கிரத்தில் நியாயம் செய்ய, நீதி செய்ய, விடுதலை தர வல்லமையுள்ள தேவனுக்கு உயிர் உள்ளவரை ஸ்தோத்திரம் செய்ய தொடங்குங்கள். தேவனின் அற்புதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்*

*தேவன்தாமே உங்கள் ஒவ்வெருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்!*

*கர்த்தருக்குள் அன்பு சகோதரி*

**ஜெயக்கொடி ஜான் வெஸ்லி**




**துதிப்பதும் ஸ்தோத்தரிப்பதும்**

**எங்கள் சந்தோஷமே**

**ஜெபிப்பதும் வேதம் வாசிப்பதும்**

**எங்கள் சந்தோஷமே**

# 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டிற்காண ஊழிய பொறுப்பாளர்கள்



Bro. Stephen
Transport
Ministry
Tel.65868048



Bro. Christopher
Sunday School
Ministry
Tel.23727483



Bro. IsaacDurai
Choir
Ministry
Tel. 96667068



Bro. Sukumar
Camp
Ministry
Tel.66579514



Bro. Arockiadoss
Magazine
Ministry
Tel.23912897



Bro. Paul Pandia Raj
Visual Communication
Ministry
Tel. 66594586



Bro. Ravi John Peter
Orphanage
Ministry
Tel.65507092



Bro. SivaKumar
Missionary
Ministry
Tel.94494541



Bro. John Peter
Prayer
Ministry
Tel.66186784

உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

தலைவர். சகோ. ரவிச்சந்திரன்

23913675 -- 66889706

செயலாளர் சகோ. ஸ்டாலின்

66021072

பொருளாளர் சகோ. விசு

90049925

பெண்கள் ஐக்கிய சங்க தலைவி

சகோதரி : ஜெயக்கொடி ஜான் வெஸ்லி

23731904 - 99145593

வாலிப ஐக்கிய குழு தலைவர்

சகோ. அற்புதராஜ் 60692485

சபையின் அஞ்சல் விலாசம்

*your Name...... Post box no 46795,*
*Fahaheel, 64018, KUWAIT.*

*Church E mail Address*

*ahmaditamil.kw@hotmail.com*

**Church Website Address**

***www.ahmaditamilcongregation.org***

தங்களது ஜெப விண்ணப்பங்கள் எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும், உங்களுக்காக ஜெபிக்க
எப்பொழுதும் ஒரு குழு ஆயத்தமாய்
இருக்கிறது

Private circulation